பக்கங்கள் 17

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை 31.08.2025 | அதிர்வு 30

## கள்வர்கள் கூட்டிணைவு! கைது செய்வது இலகு!!

### இப்படி அரசு கூறுகின்றது



“ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சம்பிக்க ரணவக்க,

03



# செம்மணியில் மேலும் 10 எலும்புக்கூடுகள் அடையாளம்

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று சனிக்கிழமை மேலும் 10 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 197 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 180 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 38ஆவது நாளாக நேற்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா வின் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டன.

# மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சுயாதீன விசாரணை வேண்டும்!

## இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் வலியுறுத்து




இலங்கையில், அண்மையில் மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர்கள் உள்ளிட்ட பலரின் மனித என்புக்கூடுகள் மற்றும் தனிப்பட்ட உடைமைகள் என்பன கடந்த கால மனித உரிமை மீறல்களின் அளவையும், நம்பகமான, வெளிப்படையான மற்றும் சுயாதீன விசாரணைகளுக்கான அவசரத் தேவையையும் வலியுறுத்துகின்றன என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல் போனோர் தினமான நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டு,

03




நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜா ரவிகரன் அங்கு ஊடகவியலாளர் மத்தியில் கூறிய ஒரு விடயம் கவனிக்கத் தக்கதாக இருந்தது.

இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்கள் மற்றும் போராளிகள் படுகொலை செய்யப்பட்டு கேப்பாப்புலவு மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களின் விகாரைகளின் கீழ் புதைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்ட அவர், அந்த இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள

02

# நேற்றும் ஒன்றன் மேல் ஒன்றாக 2 எலும்புக்கூடுகள் அடையாளம்



செம்மணி மனிதப் புதைகுழியில் ஒன்றன் மேல் ஒன்றாகக் காணப்படும் இரண்டு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் நேற்றுக் காலை முதல் மாலை வரையில் முன்னெடுக்கப்பட்டன. அதன்போது ஒன்றன் மேல் ஒன்றாக இரண்டு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அதனைச் சுற்றப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த இரண்டு எலும்புக்கூடுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்றாக அகழ்ந்து எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஒரு எலும்புக்கூட்டின் நெஞ்சுப் பகுதியில் மற்றைய எலும்புக்கூட்டின் தலைப் பகுதி காணக்கூடியவாறு அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதி சுற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று சனிக்கிழமை மாலை அவற்றை அகழ்ந்து எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன

அதேவேளை,கடந்தசிலதினங்களுக்கு முன்னான அகழ்வுப் பணிகளின் போதும் பின்னிப் பிணைந்த நிலையில் இரண்டு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் ஒன்றன் மேல் ஒன்றாக இதுவரையில் மூன்று சந்தர்ப்பங்களில் 6 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இரகசியம் பரகசியம்...

விகாரைகள் ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அந்த விகாரைகள் அகற்றப்பட்டு, விகாரைகளின் கீழ் பகுதிகள் அகழ்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டும் அல்லது நவீன கருவிகளின் துணையுடன் ஸ்கான் செய்யப்பட்டு விகாரையின் கீழ் பகுதியில் உள்ள விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியிருக்கிறார்.

இந்தச் செய்தியை வாசித்த போது எனக்கு பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அதனை இன்று வாசகர்களோடு பகிரலாம் என்று நினைக்கிறேன்.

யாழ். குடா நாட்டை இராணுவம் கைப்பற்றிய பின்னர் புதிய மில்லேனியம் பிறந்த காலகட்டத்தில் இது நடந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

அப்போது இராணுவத் தளபதியாக ஜெனரல் லயனல் பலகல்ல இருந்தார். அவர் அதற்கு முன்னர் அச்செழுவில் 51 ஆவது டிவிசனின் பொதுக் கட்டளைத் தளபதியாகவும், பின்னர் பலாலியில் வடக்குப் படைகளின் தளபதியாகவும் இருந்த காலகட்டத்தில் அவரோடு யாழ் ஊடகவியலாளர் என்ற முறையில் நெருக்கமாகப் பழகிய சந்தர்ப்பம் எனக்கு உண்டு. அதனால் ஒரு பக்கம் இராணுவ தளபதி என்ற மரியாதை இருந்தாலும், மறுபக்கம் தெரிந்த அதிகாரி என்ற நெருக்கமும் எனக்கு இருந்தது.

அவர் பலாலியில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை கூட்டி இருந்தார். கொழும்பிலிருந்து வந்த பத்திரிகையாளர்களும் அந்தச் சந்திப்பில் பங்குபற்றினர் என்று ஞாபகம். தமிழ்ப் பத்திரிகையாளர் யாராவது காத்திரமாக சில கேள்விகளை இராணுவத் தளபதியிடம் கேட்க வேண்டிய கருத்து நிலை காரணமாக நான் அவரிடம் அழுத்தமான சில கேள்விகளை கேட்டேன்.

அவற்றில் ஒன்று – விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் புதைக்கப்பட்ட அல்லது விதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை இலங்கை இராணுவத்தினர் புல்டோஸர் கொண்டு உழுது அந்த நடுகற்களை சின்னாபின்னமாக்கி, மீளாத் துயில் கொண்ட போராளிகளை மண்ணைப் புரட்டிப் போட்டு, கிளறி அடித்த கொடூரம் பற்றி நான் கேள்வி எழுப்பினேன்.

“இறந்தவர்கள் யாராயினும் அவர்களுடைய புதைகுழிகளை கிளறி நாசமாக்குவது மனிதாபிமானம் அல்ல. அது மிருகத்தனம். கொடூரக் காட்டுமிராண்டித்தனம். நிச்சயமாக அதனை புத்த பகவான் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார். அப்படி இருக்கையில், பல்லாயிரம் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை அங்கு நடப்பட்டிருந்த நடுகற்களை நீங்கள் புல்டோஸார் கொண்டு உழுது நாசமாக்கி இருக்கிறீர்கள். இந்த மனிதாபிமானமற்ற கொடூர – குரூர – ஈவிரக்கமற்ற – மிருகத்தனமான – செயலை ஏன் செய்தீர்கள்? அதை நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் ஏதும் மனிதத்துவ அடிப்படையில் இருக்கின்றனவா?” – என்ற சாரப்பட நான் அவரின் நெற்றிப்பொட்டில் அடிப்பது போல கேள்வி எழுப்பினேன்.

அவர் ஒரு கணம் திகைத்துப் போனார். முன்னரே பல தடவைகள் என்னோடு தனிப்பட்ட முறையில் பேசிய போது அத்தகைய ஈவிரக்கமற்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும், அப்போது இருந்த அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் இயங்கிய படை அதிகாரிகள் குழுவின் ஒழுங்கமைக்கப்பட்ட வேலை அது என்றும் பல தடவைகள் அவர் கூறியிருந்தார். ஆயினும் அது தனிப்பட்ட முறையில் என்னிடம் கூறப்பட்ட விடயம். இராணுவத் தளபதி என்ற முறையில், அதற்கு முன்னர் இராணுவம் இழைத்த கொடூரங்களுக்கு தளபதியாக அவர் பொறுப்பேற்க வேண்டும் என்று கருதி அந்தக் கேள்வியை நான் அவரிடம் கேட்டேன்.

ஒரு கணம் அவர் தடுமாறித் திடுக்குற்றுப் போனாராயினும் இராணுவ அதிகாரி என்ற முறையில் தன்னுடைய சிரிப்பு மாறாமல் அவர் பதில் கூறத் தொடங்கினார்.

“புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைவிட்டு ஓடும் போது இந்த மயானங்களை விட்டுச் சென்றார்கள். இவை அவர்களின் கண்காணிப்பில் – கட்டுப்பாட்டில் –இருந்த பகுதி. இங்கு தங்கள் போராளிகளின் புதை குழிகள் என்ற பெயரில் புலிகள் ஆயுதங்களை அவற்றுக்குள் புதைத்து, மறைத்து வைத்திருக்கின்றார்கள் என்று எங்களுக்கு சில தகவல்கள் கிடைத்தன. அதன் காரணமாகத்தான் அந்த ஆயுதங்களைத் தேடுவதற்காக புல்டோஸர் போட்டு கிளற வேண்டியதாயிற்று” – என்று கூறிச் சமாளித்தார் அவர்.

செய்தியாளர் சந்திப்பு முடிந்த பின்னர், பலாலியிலிருந்து புறப்படுவதற்கு முன்னதாக, அவரைத் தனியே சந்தித்து விடைபெற்றேன்.

அப்போது நான் அப்படி ஒரு கேள்வியை ஏனைய பத்திரிகையாளர்கள் முன்னிலையில் எழுப்பி, தன்னைச் சங்கடப்படுத்தி விட்டேன் என்ற ஆதங்கம் அவருக்கு இருந்திருக்கும் போல.

உங்கள் கேள்விக்கு உரிய பதில் தந்து சமாளித்து விட்டேன் என்ற பாணியில் அவர் குறிப்பு அமைந்தது.

‘பொய் சொல்லுவதற்கு எந்தத் தனித் திறமையும் தேவையில்லை’என்று நான் சிரித்துக் கொண்டு அவரைக் கடிந்து கொண்டேன்.

அவரும் சிரித்துக்கொண்டு வேறு என்ன பதிலை நான் கூற முடியும் என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

எதிர் எதிர் தரப்புகளில் இருந்து கொண்டு அரசியல் கருத்து நிலைப்பாடு காரணமாக நாங்கள் மோதிக் கொண்டாலும், அப்படி கேள்வி கேட்பது என் கடமை என்பதை அவரும், அப்படி அவர் கூறும் பொய்யை கேட்டுப் பதிலாக எழுத வேண்டியது என்னுடைய செய்தியாளர் வேலை என்று நானும் புரிந்து கொள்ளும் நிலைமை காரணமாக எங்களுக்குள் முரண்பாடு நீடிக்காமல் நட்புறவு தொடர்ந்தது.

விகாரையை உடைத்துக் கிளறிப் பார்க்க வேண்டும் என்று ரவிகரன் கூறுகின்ற விடயத்தை வாசித்த போதும், புலிகளின் பல்லாயிரம் மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட இடங்களை – நடுகற்களை – புல்டோசர் போட்டு உழுது, அழித்து, நாசமாக்கிய இராணுவம், அதற்கு கூறிய காரணம் போன்றவை எனக்கு நினைவுக்கு வந்தன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**கள்வர்கள்...**

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அனைவரும் கள்வர்களே. தாம் குற்றமிழைத்தவர்கள் என்பதால் ரணிலைக் கைது செய்யதவுடன் அச்சத்தில் இவர்கள் ஒன்றிணைந்துள்ளனர். இவர்கள் இணைந்தால் கள்வர்களைக் கைது செய்வது இன்னும் இலகுவாகும்.”

– இவ்வாறு தொழில் பயிற்சிகள் பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“சட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதியினதோ நாடாளுமன்றத்தினதோ அல்லது அமைச்சர்களினதோ கடமையல்ல. அதற்காகப் பிரத்தியே நிறுவனங்கள் உள்ளன.

கடந்த ஆட்சிக் காலங்களில் இந்த நிறுவனங்கள் அப்போதைய ஆட்சியாளர்களின் இரும்புப் பாதணிகளுக்கு இரையாகியிருந்தன. இதன் காரணமாக கடந்த காலங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனங்கள் பலவீனப்படுத்தப்பட்டு இவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

ஆனால், தற்போது எமது ஆட்சியில் அவ்வாறான நிலைமை இல்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் அரசின் தலையீடு இல்லை.

எனவே, ஆளுங்கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் சட்டம் அனைவரும் சமமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. வரலாற்றில் எந்த ஆட்சியிலும் இவ்வாறு பாகுபாடின்றி சட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இழைத்த குற்றங்களையும் தவறுகளையும் மறைக்க முடியாது. அவர் இழைத்த குற்றங்களில் ஒன்றுக்கு மாத்திரமே விளக்கமறியல் சென்றார். ஆனால், இன்னும் பல கிடப்பில் உள்ளன.

தம்மைப் பிரபலமானவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் யார்? ஜனாதிபதி நிதியத்தில் இருந்து தமது நோய்களுக்காக நிதி பெற்ற அவர்கள் பிரபலங்களா? நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் புலமைப் பரிசில் பெற்று கற்றுக் கொண்டிருக்கின்றார்.

இவர்கள் தம்மைப் பிரபலங்கள் எனக் கூறிக் கொண்டு நாட்டில் தேசிய சொத்துக்களை அழித்தவர்களாவர். அவர்கள் இன்று பிரபலங்கள் என்ற நிலையில் இருந்து இறக்கப்பட்டு சாதாரண பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் அவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் கள்வர்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சம்பிக்க ரணவக்க, மைத்திரிபால சிறிசேன அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

இவர்கள் அனைவருமே குற்றமிழைத்தவர்கள். ஆங்காங்கே ஒழிந்திருந்த அவர்கள் தற்போது ரணில் கைது செய்யப்பட்டுள்ளதால் அச்சமடைந்துள்ளனர்.

எனவே, இவர்கள் ஒன்றிணையும் போது பெரிய பூட்டு ஒன்றைப் பூட்டினால் அனைவரையும் ஒரே சந்தர்ப்பத்தில் கைது செய்ய முடியும். தாம் குற்றவாளிகள் என்பதைத் தெரிந்து கொண்டுதான் அவர்கள் ஒன்றிணைந்து தப்பிக்க முயற்சிக்கின்றனர்.” – என்றார்.

**மனிதப் புதைகுழிகள்...**

அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் கதி என்னவென்று தெரியவில்லை என்றும், இது “மௌனம், செயலற்ற தன்மை மற்றும் தண்டனையின்மையால் ஏற்பட்ட ஒரு “தேசிய காயம்” ஆகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அன்புக்குரியவரைப் பற்றிய பதில்கள் இல்லாமல் விடப்படும் வலி, காலத்தால் மட்டுமே குணப்படுத்த முடியாத ஓர் அதிர்ச்சி என்றும், உண்மை மற்றும் நீதி இல்லாததால் துன்பம், ஆழமடைகின்றது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

சர்வதேச காணாமல்போனோர் தினம் அனைத்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நினைவை மதிக்கும் ஒரு நாள் என்றும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இந்த மீறலை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளவோ, மன்னிக்கவோ அல்லது மறக்கவோ கூடாது என்பதை நினைவூட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதி, உண்மை மற்றும் இழப்பீடுகள் ஆகியவை நல்லிணக்கம், நிறுவனங்கள் மீதான நம்பிக்கை மற்றும் இலங்கையர்கள் நீண்டகாலமாகத் தேடிக் கொண்டிருக்கும் நிலையான அமைதியின் பிரிக்க முடியாத அடித்தளங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

வலுக்கட்டாயமாக காணாமல் போவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டை அங்கீகரிப்பது மற்றும் காணாமல்போனவர்கள் மீதான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை நிறுவுவது உட்பட இந்த வேதனையான மரபை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் பழிவாங்கல்கள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபை கவலை கொண்டுள்ளது.

இந்தநிலையில், தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அனைவரும் தண்டிக்கப்படக்கூடாது என்றும், பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஜுன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர், காணாமல்போனவர்களின் குடும்பங்களைச் சந்தித்து உண்மையை வெளிக்கொணர்வது ஓர் அடிப்படை உரிமை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

மனிதப் புதைகுழி தொடர்பில் விசாரிக்க அவர் விடுத்த அழைப்பு, கடந்த காலத்தை தைரியத்துடனும் வெளிப்படைத்தன்மையுடனும் எதிர்கொள்ள வேண்டியதன் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்தச் செயற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து ஆதரவை வழங்குகின்றது.

இந்த நாளிலும், ஒவ்வொரு நாளும், தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் ஒவ்வொரு குடும்பத்துடனும் ஐக்கிய நாடுகள் சபை உறுதுணையாக நிற்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்கள் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாததற்கான உத்தரவாதங்களுக்கான உரிமைகளை உணர முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்த நம்பகமான, சுயாதீனமான விசாரணைகளை ஆதரிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து உறுதியாக இருக்கின்றது என்றும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கைதான பாதள உலகக் குழுவினர் ஐவரும் ஜகார்த்தாவில் இருந்து கூட்டி வரப்பட்டனர்

## அமைச்சர் விஜேபால கட்டுநாயக்காவுக்குச் சென்று இந்தோனேசிய அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பு




இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் இலங்கையின் மிகவும் தேடப்படும் ஐந்து பாதாள உலக நபர்களைப் பிடிக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைத்து ஆதரித்த இந்தோனேசிய காவல்துறை அதிகாரிகளை இலங்கை அரசாங்கம் நேற்றுப் பாராட்டியது.

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட குற்றக்குழு உறுப்பினரான கெஹெல் பத்தர பத்மே உள்ளிட்டோர் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த 5 பேருடன் நேற்று பிற்பகல் 3.30 அளவில் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவிலிருந்து புறப்பட்ட சிறிலங்கன் பயணிகள் விமானம், நேற்று இரவு 7.20 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை இந்தோனேசிய அதிகாரிகள் கூட்டி வந்தனர்.

கூட்டு நடவடிக்கையில் இந்தோனேஷிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்க பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று மாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று நேரில் சென்றிருந்தார்.

பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவர் கெஹல்பத்தர பத்மே உட்பட ஐந்து சந்தேக நபர்களும் உடனடியாக பலத்த பாதுகாப்பின் கீழ் இலங்கைக் குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

எல்லைகளுக்கு அப்பால் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலையமைப்பை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட இலங்கை காவல்துறை, குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் இந்தோனேசிய சட்ட அமலாக்கப் பிரிவினருக்கு இடையேயான ஒருங்கிணைந்த முயற்சியின் விளைவாக இந்த கைதுகள் நடந்தன.






# கேப்பாப்புலவு, வட்டுவாகல் படைமுகாம் விகாரைகளை சோதனைக்குட்படுத்தக் கோருகின்றார் ரவிகரன் எம்.பி.

## சரணடைந்தோர் அவற்றின் கீழ்தான் புதைக்கப்பட்டுள்ளனராம்

(விஜயரத்தினம் சரவணன்)

இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்கள் மற்றும் போராளிகள் படுகொலை செய்யப்பட்டு கேப்பாப்புலவு மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களின் விகாரைகளின் கீழ் புதைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அந்த இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு தமிழ் இனவழிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், தமிழர் தாயகப் பகுதிகளில் இனங்காணப்பட்ட மனிதபுதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு பன்னாட்டு நீதி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவிலிருந்து செம்மணிவரை மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

தமிழ் இனவழிப்பு விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், வடகிழக்கில் இனங்காணப்பட்டுள்ள மனிதப்புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நாம் பன்னாட்ட நீதிவிசாரணையையே தொடர்ச்சியாகக் கோரி வருகின்றோம்.

கடந்த காலத்தில் தமிழர்கள் மீது இனவழிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றன என்பதற்கு வடக்கு, கிழக்கு தமிழர்தாயகத்தில் இனங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளும், மனிதப் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகின்றவையும் சாட்சியங்களாக இருக்கின்றன. இதனை யாருமே மறுக்கமுடியாது.

தற்போது செம்மணி மனிதப்புதைகுழி பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. செம்மணியில் அகழ, அகழ எம்மவர்கள் எலும்புக்கூடுகளாக மீட்கப்படுகின்ற அவலங்களைக் காண்கின்றோம். கொலை செய்தவனிடமே நீதியைக் கோருகின்ற உள்ளக நீதி விசாரணைப் பொறிமுறையில் எமக்கு கடுகளவும் நம்பிக்கை கிடையாது.

ஆகவேதான் தமிழ் இனவழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மனிதப்புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு தொடர்சியாகஓ பன்னாட்டு நீதி விசாரணையைக் கோருகின்றோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழிகள் திட்டமிட்டவகையில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு இனங்காணப்பட்டிருக்கவில்லை. மாறாக இவ்வாறு இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் எதேச்சையான சந்தர்ப்பங்களிலேயே இனங்காணப்பட்டன.

ஆனால் முல்லைத்தீவில் வட்டுவாகல் மற்றும் கேப்பாப்புலவு பகுதிகளில் இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் அகற்றப்பட்டு, விகாரைகளின் கீழ்ப்பகுதிகள் அகழ்ந்து ஆய்வுகள் செய்யப்படவேண்டும். அல்லது நவீன கருவிகளின் துணையுடன் ஸ்கேன் செய்யப்பட்டு விகாரையின் கீழ்ப்பகுதியில் உள்ள விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவேண்டும் எனக் கோருகின்றேன்.

கடந்த 2009ஆண்டு இறுதிக்கட்ட போரின்போது சரணடைந்த போராளிகள் மற்றும் மக்களை இராணுவம் கைது செய்துள்ளது. அதன்பின்னர் அவ்வாறு இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்கள் வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலயத்திற்கு அருகே கடற்கரைநோக்கி போகும் பாதையினூடாக பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதேபோல் சரணடைந்த பலர் கேப்பாப்புலவு நோக்கியும் இராணுவத்தினரால் பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவ்வாறு இராணுவத்தால் பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திருப்பி அழைத்துவரப்படவில்லை. என்ன ஆனார்கள் என்பதும் தெரியாமலுள்ளது. அப்படியெனில் அவ்வாறு அழைத்துச்செல்லப்பட்டவர்கள் எங்கேபோனார்கள்?

தனிச் சைவத் தமிழ் கிராமமான வட்டுவாகலில் எதற்கு பாரிய விகாரை அமைக்கப்பட்டது? அந்த விகாரையை அகற்றி அகழ்வாய்வுகளை மேற்கொள்ளவேண்டும். அல்லது விசேட ஸ்கேன் கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதனை மேற்கொண்டு உண்மைத்தன்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும். அதேபோல் கேப்பாப்புலவு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள பாரிய விகாரையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதுதொடர்பில் ஏற்கனவே பலதடவைகள் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றிலும் இந்தக் கேப்பாப்புலவு மற்றும் வட்டுவாகல் இராணுவ முகாம்களில் அமைந்துள்ள விகாரைகள் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டுமெனக் கோரியுள்ளேன். இதுவரை அந்த விகாரைகளை ஆய்வுக்குட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறாக எமது தமிழ் இனத்தை அழித்து, கடந்தகால இனவாத பெரும்பான்மையின இலங்கை அரசுகள் மேற்கொண்ட அடாவடிகளை பன்னாடுகள் தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றன.

பன்னாடுகளுக்கு தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பன்னாடுகள் எமது தமிழ் இனத்தின் மீது கரிசனை கொள்ள வேண்டும். எமக்கான நீதியைப் பெற்றுத்தர முன்வரவேண்டும்.

தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு பன்னாட்டு நீதி விசாரணையே வேண்டுமென்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். பன்னாட்டு நீதிவிசாரணைப் பொறிமுறையிலேயே எமக்கு நம்பிக்கையுள்ளது. தமிழ் இனவழிப்பு, காணாமல்போனோர் விடயம், வடக்கு, கிழக்கு மனிதப்புதைகுழி விவகாரங்களில் நாங்கள் ஒருபோதும் உள்ளக நீதிவிசாரணையையும், இலங்கை அரசையும் நம்பத் தயாராக இல்லை.

எனவே தற்போது இந்த நாட்டை ஆட்சிசெய்கின்ற இந்த அரசு, பன்னாட்டு நீதிவிசாரணைக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கிட்டாத நீதி

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகளும் அவற்றிலிருந்து வெளிப்படும் என்புக்கூடுகள், மனித எச்சங்கள் மற்றும் குழந்தைகள் உட்பட்டவர்களின் தனிப்பட்ட உடைமைகள் என்பன கடந்த கால மனித உரிமை மீறல்களின் அளவையும், மறுபுறத்தில் நம்பகமான, வெளிப்படையான மற்றும் சுயாதீனமான விசாரணைகளுக்கான அவசர தேவையையும் தெளிவாக வலியுறுத்துகின்றன என்று ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அண்ட்ரே ஃபிராஞ்ச் தெரிவித்திருக்கிறார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டமையை ஒட்டி, இலங்கை நிலைவரத்தைக் குறிப்பிட்டு, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் கதி என்னவென்பது பல ஆண்டுகள் கடந்தும் தெரியவில்லை எனும் விடயத்தை அவர் மிக வேதனையோடு சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இப்படிக் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பதில் இல்லாத மௌனம் நீடிக்கின்றமை, செயலற்ற தன்மை, குற்றம் இழைத்தோருக்குத் தண்டனை இல்லை என்பதை உறுதிப்படுத்தும் போக்கு ஆகியவை இந்த விடயத்தை தேசியக் காயமாக்கி இருக்கின்றன - மாறாத வடுவாக்கி இருக்கின்றன - என்ற சாரப்படக் குறிப்பிட்டு, அவர் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கீழ் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நடவடிக்கை அல்லது குற்றம் பொறுத்துக் கொள்ளவோ, மன்னிக்கவோ அல்லது மறந்துவிடவோ கூடாது என்பதை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இந்த சர்வதேச தினம் நினைவூட்டுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

அவரது இந்தக் கருத்து நேரடியாக இலங்கை அரசை நோக்கி சொல்லப்படாவிட்டாலும், வெளிப்படையாகவே இலங்கை அரசுக்கு நெத்தியடி கொடுக்கும் விதத்தில் இது கூறப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

நாட்டில் நீதி நிலைநாட்டப்படுவதற்கும், நல்லிணக்கம் நிலவுவதற்கும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும், நம்பிக்கையான எதிர்காலத்திற்கும் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்க பட்டோர் விடயத்தில் உண்மைகளை வெளிக்கொணர்ந்து, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, இவ்விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நம்பிக்கையூட்டுவது மிக முக்கியமாகும்.

அந்த உண்மையை அரசுக்கு இடித்துரைக்கும் விதத்தில் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறார் இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி.

யுத்தத்தின் இறுதி கட்டம் வரை தமிழ் மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படும் நிகழ்வுகள் தாராளமாக நடந்தன. பல்லாயிரக்கணக்கில் காணாமல் ஆக்கப்பட்ட இந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். உண்மை, நேர்மை, நீதி, நியாயம் மிக்க விசாரணைகளை சர்வதேச நியமனங்களுக்கு அமைவாக நடத்துவதன் மூலமே இவ்விடயத்தில் உண்மை சட்ட ரீதியாக வெளிப்படுத்தப்பட முடியும். அதற்கான திராணி இலங்கை அரசுக்கு இல்லை.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அடக்கும் பெயரில் தன்னுடைய முப்படைகளும் பொலிஸும் புரிந்த அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள், அட்டகாசங்கள், அராஜகங்கள், அரச பயங்கரவாதம் போன்றவை அம்பலமாகி விடும் என்பதால் இத்தகைய நீதி முறையான விசாரணைகளுக்கு பௌத்த சிங்கள அடக்குமுறை ஆட்சியாளர்கள் ஒருபோதும் இணங்கப் போவதில்லை.

அவர்களை அதற்குரிய வழியில் இணங்க வைக்காத வரை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கப் போவதில்லை என்பதுதான் யதார்த்தக் கள நிலைமையாகும்.

# ரணில் 6 ஆம் திகதி விசேட உரை



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 6 ஆம் திகதி விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

கட்சியின் மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி இந்த விசேட உரையை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த 26 ஆம் திகதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வைத்திய அறிக்கைகளை பரிசீலித்த பின்னர், கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர பிணை அனுமதியை வழங்கியிருந்தார்.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 22 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார். அதே நாளில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள், வைத்திய பரிந்துரைகளின் பேரில் முன்னாள் ஜனாதிபதியை கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானையின் தாக்குதலுக்கு சேருநுவர தங்கநகரில் ஒருவர் பலி

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார் என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

தங்கநகர் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இரவு வயலுக்கு காவலுக்குச் சென்று காலை வீடு திரும்பும் வேளையில் தோட்டம் ஒன்றிக்குள் மறைந்திருந்த யானை தாக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கோமாரி பொத்துவிலில் பஸ் விபத்து! வயோதிபர் சாவு; 57 பேருக்குக் காயம்



கோமாரி, பொத்துவில் பகுதியில் பஸ் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது மேலும் 57 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோமாரி பகுதியில் பாலம் ஒன்றில் பஸ் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவர்களை சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கெப்பட்டிபொலவிலிருந்து அறுகம்பைக்கு சுற்றுலா சென்ற பஸ் ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வெலிமடைப் பகுதியைச் சேர்ந்த 74 வயது நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். அத்தோடு பஸ் பலத்த சேதமடைந்துள்ளது.




# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வேண்டி லண்டனிலும் நேற்று ஆர்ப்பாட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்காக நீதி கோரியும் செம்மணி படுகொலைகளுக்கு நீதி வேண்டியும் நேற்று – வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில் – லண்டனில் பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

சிறிலங்கா உயர்ஸ்தானிகரகத்திலிருந்து பிரித்தானிய பிரதமர் அலுவலகம் வரைக்கும் பேரணியாக சென்ற புலம்பெயர் தமிழ் உறவுகள் கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

படுகொலை செய்யப்பட்டு செம்மணி மனிதப் புதைக்குழியில் புதைக்கப்பட்டோருக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கும் நீதி கோரியும் இனவழிப்பு அரசாங்கத்திற்கு தண்டனை வழங்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பெருந்திரளான புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்டு சிறிலங்கா அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பை உணர்வுபூர்வமாக முன்வைத்தனர்.



















# மயிலிட்டியில் இந்திய மீனவரின் படகுகளை அள்ளிக் கொட்டும் வேலை நேற்று ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திக்கான ஆயத்தப்பணியை ஆரம்பிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா அங்கு நேரில் வருகின்றமையால் அந்தத் துறைமுகத்தில் நிறைந்து அடைத்துக் கிடக்கும் இந்தியப் படகுகளை அங்கிருந்து அப்புறப்படுத்தும் பணிகள் நேற்று மாலை ஆரம்பித்து, இரவிரவாக முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திற்கு நாளைய தினம் வருகை தரும் ஜனாதிபதி அநுராகுமார திஸநாயக்கா மயிலிட்டித் துறைமுகப் பகுதிக்கும் விஜயம் செய்கின்றமையால் அங்கே தரித்து நிற்கும் இந்தியப் படகுகள் உடனடியாக அப்புறப்படுத்தப்படவுள்ளன என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியிருந்தது.

இதற்கமைய நேற்று இரவு முதல் ஜே.சி.பி. இயந்திர உதவியுடன் இந்திய மீனவர்களின் படகுகள் அவசர அவசரமாக வெளியேற்றப்படுகின்றன. இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் மயிலிட்டித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இலங்கை நீதிமன்றங்களினால் அரசுடைமையாக்கப்பட்ட படகுகளை அள்ளிக் கொட்டும் வேலைகளே நேற்று இரவிரவாக முன்னெடுக்கப்பட்டன.

நேற்றிரவு வரை இந்தப் படகுகள் கரைக்கு இழுத்துத் தள்ளப்பட்டன. பின்னர் அவை பாரவூர்திகளில் ஏற்றப்பட்டு, அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கொட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இந்திய மீனவர்களின் படகுகள் கனரக இயந்திரங்கள் மூலம் இழுத்துப் பறித்து அகற்றப்படுவதனால் அவை சேதமடையும் எனவும், இதனால் படகுகள் மீளப் பயன்படுத்தும் நிலையில் இருக்குமா என்ற சந்தேகம் எழுவதாகவும் கூறப்படுகின்றது. ஏற்கனவே இது போன்ற 200 படகுகள் இலங்கையில் பழைய இரும்பாக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. தற்போது மயிலிட்டியில் நிற்கும் 123 படகுகளில் எத்தனை படகுகள் இரும்பாக மாறும் அபாயம் ஏறபடுமோ தெரியவில்லை என தமிழக மீனவர்கள் உள்ளூர் ஊடகங்களிடம் கவலை தெரிவிக்கின்றனர்.










# வீட்டு உணவுதான் வேண்டும்!

## சிறையில் இருக்கும் ராஜித கோரிக்கை



வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வீட்டு உணவுகளைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ராஜித சேனாரத்னவைப் பரிசோதித்த சிறைச்சாலை வைத்தியர்கள், அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் அளவுக்கு நோய் பாதிப்பு எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளது என்றும் சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் தன்னைக் கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவைத் தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு கோரி ராஜித சேனாரத்ன நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். ஆனால், ராஜித சேனாரத்னவின் மனுவை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இந்நிலையில், ராஜித சேனாரத்ன கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்றுக் காலை ஆஜரானதைத் தொடர்ந்து அவரைக் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறும் அதுவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

பின்னர் ராஜித சேனாரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் ஒரே நாளில் 5 ஆயிரத்து 680 பேர் கைது!



இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 680 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 20 பேரும், சந்தேகத்தின் பேரில் 815 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 315 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 86 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 56 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 178 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# யாழ் நூலகத்திற்கு ஜனாதிபதியின் வருகை; மாநகர முதல்வருக்கு நேற்று அழைப்பிதழ்!





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா நாளைய தினம் மாநகர சபையின் பிரதான நூலகத்திற்கு வருகை தரும் நிகழ்விற்கு நேற்றைய தினம் மாநகர முதல்வருக்கு அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு நாளை வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா மாவட்டத்தில் பல நிகழ்வுகளில் பங்குகொள்கின்றமையோடு மாநகர சபையின் பிரதான நூலகத்தில் இடம்பெறும் நிகழ்விலும் பங்கு கொள்கின்றார்.

ஜனாதிபதியின் பொது நூலக வருகை தொடர்பில் மாநகர முதல்வருக்கு அறிவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்ட சூழலில் நேற்று முதல்வருக்கான அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் காரணமாக நாளைய தினம் நூலகத்தில் இடம்பெறும் ஜனாதிபதியின் வருகையின்போது மாநகர முதல்வர், ஆணையாளர், உறுப்பினர்கள் உள்ளிட்ட சகலரும் பங்குகொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது..



# உத்தேச கல்விச் சீர்திருத்தம் - ஓர் அறிமுகம்



கலாநிதி செ. அறிவழகன் - (கணித புள்ளிவிவரவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்)

இலவசக் கல்வி நடைமுறையில் உள்ள இலங்கையில் உயர் கல்வி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளன.

மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக வாய்ப்புகளை பெறுவதற்காக, மாணவர்கள் உயர்தரத்தில் கடுமையான போட்டிப் பரீட்சைக்கு தோற்றி, உயர் புள்ளிகள் பெற வேண்டி உள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான மாணவர்கள் போட்டிக்கு தயார்படுத்தப்படும் பந்தய குதிரைகளைப் போன்று பரீட்சைக்காக மட்டுமே கற்பவர்களாக உள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக, தனியார் கல்வி நிலையங்களின் அளவுக்கு அதிகமான ஆதிக்கம், மாணவர்களின் பெரும்பாலான நேரத்தை கபளீகரம் செய்கின்றது. மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்முறைப் படிப்புகளுக்கு தமது பிள்ளைகள் செல்ல வேண்டும் என்பதற்காக வசதி படைத்த பெற்றோர்கள் பெருமளவு பணத்தைத் தனியார் கல்வி நிலையங்களுக்கும், பிரத்தியேக வகுப்புகளுக்கும் செலவழிக்கின்றனர். இதனால் ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுவது மாத்திரமின்றி இலவச கல்வியும் தனது நோக்கத்தை இழந்து நிற்கின்றது.

இலங்கையில் பரீட்சை மையக் கல்வியும் போட்டிப் பரீட்சைகளும் 10 வயது பாலகர்களின் மேலேயே புலமைப் பரிசில் பரீட்சை எனும் வடிவில் திணிக்கப்படுகின்றது. இலங்கையில் பட்டப்படிப்பை முடிப்பதற்கு ஏற்படும் தேவையற்ற கால விரயமும் மாணவர்களை பாதிக்கின்றது. இவையனைத்தும் இலங்கையில் கல்வி சீர்திருத்தத்திற்கான தேவையை உணர்த்தி நிற்கின்றன.

மேற்படி கல்விச் சீர்திருத்தம் தொடர்பான பல்வேறு பரிசீலனைகளும் முன் ஆயத்த நடவடிக்கைகளும் 2019 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உத்தேச கல்விச் சீர்திருத்தம், 21 ஆம் நூற்றாண்டின் பின்னரான சவால்களை எதிர்கொள்ள கூடிய பிரஜைகளை உருவாக்குவதையும், நிலைத்த வளர்ச்சி மற்றும் அமைதியை, உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டது.

உத்தேச கல்விச் சீர்திருத்தம் 5 முக்கிய தூண்களைக் கொண்டது. அவையாவன:-

1. பாடத்திட்ட உருவாக்கம்

2. மனித வள மேம்பாடு: ஆசிரியர் திறன் பயிற்சி, தொடர் கல்வி, ஆசிரியர் தொழிலினை ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்(Profession) ஆக மாற்றல்.

3. கல்வி நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்: அனைத்து மாணவர்களுக்கும் மூன்று கிலோமீட்டர் சுற்று வட்டத்திற்குள் தரமான இடைநிலைக் கல்வி வாய்ப்புகளை வழங்கும் வகையில் பாடசாலைகளை தரம் உயர்த்தல்.

4. மதிப்பீடு மற்றும் பரீட்சை முறைகள்: பாடசாலை மட்ட மதிப்பீட்டிற்கான தேசிய திட்டம் வரைதல், பரீட்சைத் திணைக்களத்தின் திறனை வளர்த்தல்.

5. பொதுமக்களுக்கு அறிவு ஊட்டல்: கலந்துரையாடல்கள் மற்றும் செய்தி ஊடகங்கள் மூலமாக.

பாடத்திட்டஉருவாக்கத்தினைப்பொறுத்த வரையில் குறிப்பிடத்தக்கவளவு மாற்றம் இடைநிலைக் கல்வியில் ஏற்படுத்தப்பட உள்ளது. 2026 ஆம் ஆண்டில் இளைய இடைநிலையிற்கான (Junior Secondary) கல்வி சீர்திருத்தம் ஆண்டு ஆறுக்கு அறிமுகப்படுத்தப்படும். மொடுலர் (Modular) மற்றும் கிரெடிட் (Credit) சார்ந்த பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. 10 மணித்தியால வகுப்பறை கற்றல்/ செயற்பாடு ஒரு கிரெடிட் ஆக கொள்ளப்படும். ஒரு தவணை 35 கிரெடிட்களைக் கொண்டது. இவற்றில் 14 அத்தியாவசியமான பாடங்களுக்கு, 28 கிரெடிட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. விளையாட்டு மற்றும் சங்கங்களில் பங்களிப்பிற்கு, 2 கிரெடிட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்படி 14 அத்தியாவசியமான பாடங்களில் இருந்து மாணவன் தான் விரும்பும் மூன்று பாடங்களை தெரிந்து அவற்றில் தலா ஒரு கிரெடிட் இற்கு (10 மணித்தியால கற்றல்) மேலதிகமாக கற்க முடியும். இதற்கு மூன்று கிரெடிட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய இரு கிரெடிட்களும் அனைத்து பாடங்களுக்கும் பயன்படும் திறன்களை (Transversal skills) வளர்ப்பதற்கு ஒதுக்கப்படும். இதற்கு உதாரணமாக சமூக சேவை, இலக்கியத்தை நயத்தல், விளையாட்டு மற்றும் உடற்கல்வி என்பவற்றை குறிப்பிடலாம்.

அதாவது -

1. அத்தியாவசியமான 14 பாடங்கள் -28 கிரெடிட்கள்

2. விளையாட்டு/ சங்கங்களில் பங்களிப்பு-2 கிரெடிட்கள்

3. மேலதிக கற்றல்-3 கிரெடிட்கள்

4. Transversal skills-2 கிரெடிட்கள்

மாணவர்களுக்கு அதிக அழுத்தத்தை கொடுக்கக்கூடிய முன்னைய இறுதித்தேர்வு முறை மாற்றப்பட்டு தொடர் மதிப்பீடும் (Formative Assessment) முடிவில் ஒரு இறுதிக்கட்ட மதிப்பீடும் (Summative Assessment) நடத்தப்படும். இதில் தொடர் மதிப்பீட்டிற்கு 70% புள்ளிகளும் இறுதிக்கட்ட மதிப்பீடிற்கு 30% புள்ளிகளும் வழங்க உத்தேசிக்கப்பட்டாலும், ஆரம்பத்தில் இது, 60% மற்றும் 40% ஆகவோ அல்லது அதனிலும் குறைவாகவோ இருக்கலாம். மாணவர்

தொடர்ச்சி▼



# உத்தேச கல்விச் சீர்திருத்தம் - ஓர் அறிமுகம்

தொடர்ச்சி▲

களது தேர்வு முடிவுகள் புள்ளிகளுக்கு பதிலாக GPA ஆல் பதியப்படும். உத்தேச கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய பாடசாலை நேரம் 30 நிமிடங்களால் அதிகரிக்கப்படவுள்ளது. ஒரு பாடசாலை நாள் 50 நிமிடங்களைக் கொண்ட 7 பாடவேளைகளையும் இரு இடைவேளைகளையும் கொண்டிருக்கும்.

ஆண்டு 9 இல் தேசிய ரீதியில் உளவியல் திறன் தேர்வு (Psychometric Test) நடாத்தப்படும். மேற்படி முதலாவது தேர்வு 2029 இல் நடைபெறும். இப்பரீட்சையில் எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு திறன்கள் பரிசோதிக்கப்படும். மேற்படி தேர்வு மாணவனின் தொழில் சார் ஆர்வம் மற்றும் கல்வித்துறை சார் ஆர்வம் என்பவற்றைக் கண்டறிய உதவும் .

2028 ஆம் ஆண்டில் மூத்த இடைநிலை கட்டம் I இற்கான (Senior Secondary Phase I) கல்வி சீர்திருத்தம் ஆண்டு பத்துக்கு அறிமுகப்படுத்தப்படும். இதில் 5 கட்டாய பாடங்களாக,

1. கணிதம் (3 கிரேடிட்கள்)
2. விஞ்ஞானம் (3 கிரேடிட்கள்)
3. ஆங்கிலம் (3 கிரேடிட்கள்)
4. தாய் மொழி(3 கிரேடிட்கள்)
5. சமயம் மற்றும் விழுமிய கல்வி (2 கிரேடிட்கள்)

அமையும்.

கட்டாய பாடங்களாக 14 கிரெடிட்களுடன் மேலும் 4 கிரெடிட்களுக்கு, பல பாடங்களைக் கொண்ட தெரிவுக்கூடை ஒன்றிலிருந்து ஒவ்வொன்றும் தலா 2 கிரெடிட்களைக் கொண்ட இரு தேர்வுப் பாடங்களை கற்க வேண்டும். இந்த தேர்வு கூடையில், இரண்டாம் மொழி, ICT, வரலாறு, அழகியல் பாடங்கள், தொழில்நுட்ப பாடங்கள், புவியியல், குடிமை கல்வி என்பவற்றுடன் தொழில் முனைவும் நிதி அறிவும் எனும் புதிய பாடமும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இவற்றிற்கு அப்பால் மேலதிக கற்றலுக்காக 14 கிரெடிட்கள் ஒதுக்கப்படும். மேலதிக கற்றலைப் பொறுத்தவரையில் நான்கு பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும். அவையாவன,

1. விஞ்ஞானம் சார்ந்த கற்கைகள் (STEM)
2. சமூக விஞ்ஞானமும் மானுடவியலும்
3. தொழில் முனைவு மற்றும் முகாமைத்துவம்
4. திறன்கள் / தொழிற்கல்வி

மேற்படி 14 கிரெடிட்களுக்காக மாணவன் ஏழு பாடங்களை மேலதிகமாக கற்க முடியும். இதில் மாணவன் தேர்வு செய்த பாடப்பிரிவில் நாலு பாடங்களும் ஏனைய பாடப்பிரிவுகளில் மூன்று பாடங்களும் கற்கலாம். ஒவ்வொரு பாடப் பிரிவிலும் தெரிவு செய்வதற்கு பல பாட தெரிவுகள் இருக்கும். ஏனைய 3 கிரெடிட்களும் அனைத்து பாடங்களுக்கும் பயன்படும் திறன்களை (Transversal skills) வளர்ப்பதற்கு ஒதுக்கப்படும்.

ஆண்டு 11 இரண்டாம் தவணை முடிவில் தேசிய ரீதியில் க. பொ. த (சா/த) பரீட்சை நடத்தப்படும். தற்போது மார்கழி மாதத்தில் நடத்தப்பட்டு வரும் மேற்படி பரீட்சையின் முடிவுகள் வெளிவர 6 மாதம் அளவில் தாமதமாவதால் உயர் தரம் கற்க தேவையற்ற ஆறு மாத கால தாமதம் ஏற்படுகின்றது. இதனை தவிர்ப்பதற்காக உத்தேச கல்விச் சீர்திருத்தத்தின்படி க. பொ. த (சா/த) பரீட்சை ஆவணி மாதத்தில் நடத்தப்பட்டு முடிவுகள் மார்கழி மாதத்திற்கு முன்னதாக அறிவிக்கப்படும். மாணவர்கள் அடுத்த வருடத்தின் தை மாதத்திலேயே தமது உயர்தர கல்வியை ஆரம்பிக்க முடியும்.

மேலும் மேற்படி மூத்த இடைநிலை கட்டம் I வகுப்புகளில் ஒரு தவணையில் கற்பிக்கப்படும் 35 கிரெடிட்களில் 18 கிரெடிட் பாடங்களுக்கு (கட்டாய பாடங்கள்- 14 கிரெடிட் மற்றும் தேர்வுப் பாடங்கள்- 4 கிரெடிட்), அதாவது அண்ணளவாக 50% வீதமான பாடங்களுக்கு, மட்டுமே தேசிய மட்ட பரீட்சை நடத்தப்படும். மேற்படி கல்வி சீர்திருத்ததிற்கு அமைவான முதலாவது க.பொ.த (சா/த) பரீட்சை 2029 இல் நடைபெறும்.

2030 ஆம் ஆண்டில் மூத்த இடைநிலை கட்டம் II (Senior Secondary Phase II) கல்வி சீர்திருத்தம் ஆண்டு 12இல் அறிமுகப்படுத்தப்படும். ஏற்கனவே உள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம், மானுடவியலும் சமூக விஞ்ஞானமும், முகாமைத்துவம் எனும் நான்கு பிரிவுகளுக்கு மேலதிகமாக தொழிற்கல்வி பாதை புதிய ஒரு பிரிவாக அறிமுகப்படுத்தப்பட உள்ளது. மூத்த இடைநிலை கட்டம் இரண்டுக்கான கல்வி சீர்திருத்தம் தொடர்பான ஆலோசனைகளும் கலந்துரையாடல்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை அறிமுகப்படுத்த இன்னமும் ஐந்து வருடங்கள் உள்ளதால் இது தொடர்பான தீர்க்கமான முடிவுகள் இதுவரை எடுக்கப்படவில்லை. உயர்கல்வியிலும் சீர்திருத்தங்களை முன்னெடுப்பது குறித்து கல்வி உயர் கல்வி அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

# நாட்டின் பெறுமதி சேர் உற்பத்திகளுக்கு எதிர்காலத்தில் ஒத்துழைப்பு வழங்கப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர் உற்பத்திகளுக்கு எதிர்காலத்தில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கைத்தொழில்களை சிரமப்படுத்துவதற்காக அன்றி, வசதிகளை வழங்குவதற்கே அரசாங்கங்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயம் மற்றும் உணவுத் துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுடனான 2026 வரவு - செலவு திட்டத்திற்கான பூர்வாங்கக் கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருள்களின் விலைகள் உற்பத்தியாளரால் தீர்மானிக்கப்பட்டாலும் விவசாயப் பொருள்களைப் பொறுத்தவரையில் விவசாயத் துறையின் ஒழுங்கின்மை காரணத்தால் நுகர்வோரினால் விலைகளை நிர்ணயிக்க வழிவகுத்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் உற்பத்தியை நுகர்வோரிடம் சென்றடைவதில் முறையான தன்மை இல்லை என்பதுடன், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

விவசாயப் பயிர்கள், பால் மற்றும் விலங்குப் பொருள்களுக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்கு தனியார் துறையிடமிருந்து முழு ஆதரவைப் பெறுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதோடு உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் பொறுப்பு தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டு இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதற்காக ஒரு அரசாங்கமாக ஒரு புதிய வழிமுறையை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

மேலும், கால்நடைத் துறை ஒரு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிற்துறையாக மாறத் தவறியதால் அதன் உற்பத்தித்திறனை அடைய முடியாமல் போனது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. கால்நடைக் கைத்தொழில்களின் மேம்பாடு மற்றும் உற்பத்தி விநியோகத்தை முறைப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரஸல் அபொன்சு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் விவசாயம் மற்றும் உணவுத் துறைகளில் ஈடுபட்டுள்ள பல முன்னணி வர்த்தகர்கள் பங்கேற்றனர்.















# மோடியின் தாயார் குறித்து அவதூறு: தமிழ்நாடு பா.ஜ.க. ஆர்ப்பாட்டம்



பிஹாரில் நடந்த வாக்காளர் அதிகார யாத்திரையில் பிரதமர் மோடியின் தாயார் குறித்து அவதூறு தெரிவித்ததற்கு கண்டனம் தெரிவித்து தமிழக பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிஹார் மாநிலம் தர்பங்காவில் நடைபெற்ற வாக்காளர் அதிகார யாத்திரை கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர், பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் குறித்து அவதூறாக பேசியிருந்தார்.

இச்சம்பவத்துக்கு பா.ஜ.கவினர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இதையொட்டி, சென்னை எழும்பூர் இராஜரத்தினம் அரங்கம் அருகே தமிழக பா.ஜ.க. துணைத் தலைவர் கரு. நாகராஜன் தலைமையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், காங்கிரஸ் கட்சி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோருக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் ராகுல் காந்தி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என பா.ஜ.கவினர் முழக்கங்களை எழுப்பினர்.

அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதால், பா.ஜ.க.வினரை பொலிஸ்ஸார் கைது செய்தனர்.

# எஸ்.சி.ஓ. உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்கு சீனா சென்ற மோடிக்கு உற்சாக வரவேற்பு



எஸ்.சி.ஓ. உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக சீனாவின் தியான்ஜின் நகருக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு, விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ) இரண்டு நாள் உச்சிமாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்பதற்காக தியான்ஜின் நகரில் உள்ள பின்ஹாய் சர்வதேச விமான நிலையம் சென்றடைந்த பிரதமர் மோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சீன உயர் அதிகாரிகளும் இந்திய உயர் அதிகாரிகளும் விமான நிலையத்தில் அவரை வரவேற்றனர். விமான நிலையத்தில் கலைஞர்களின் நடன நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

எஸ்.சி.ஓ. அமைப்பில் பெலாரஸ், சீனா, ஈரான், இந்தியா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. மேலும் பல நாடுகள் பார்வையாளர்களாகவும், பேச்சுவார்த்தை நடத்தும் நாடுகளாகவும் இதில் பங்கேற்கின்றன. 2005 முதல் பார்வையாளராக இருந்த



இந்தியா, 2017 இல் உறுப்பு நாடாக மாறியது.

கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய – சீன இராணுவ வீரர்களுக்கு இடையே கடந்த 2020 இல் நிகழ்ந்த மோதலுக்குப் பிறகு பிரதமர் மோடி சீனா சென்றது இதுவே முதல்முறை.

இந்த மோதலுக்குப் பிறகு இரு நாடுகளும் உறவை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன. சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கடந்த 18–19 திகதிகளில் இந்தியா வந்து, பிரதமர் மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இரு நாடுகளுக்கு இடையே நேரடி விமானப் போக்குவரத்தை கூடிய விரைவில் தொடங்கவும் இரு நாடுகளும் முடிவெடுத்துள்ளன.

எஸ்.சி.ஓ. உச்சிமாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் நரேந்திர மோடி, இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். தனது சீன பயணம் தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“சீனாவின் தியான்ஜினில் தரையிறங்கி உள்ளேன். எஸ்.சி.ஓ. உச்சி மாநாட்டின் கலந்துரையாடல்களையும் பல்வேறு உலகத் தலைவர்களுடனான சந்திப்பையும் எதிர்நோக்குகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

7 ஆண்டுகளுக்குப் பிறகு, சீனா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, சீனா உடனான வர்த்தக உறவை மேம்படுத்துவது தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் வரிவிதிப்பு கொள்கைகளால் இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், இந்த பயணம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.



## ஏமனில் இஸ்ரேல் தாக்குதல்:

# ஹவுதி அரசாங்கத்தின் பிரதமர் அஹமத் அல் ராஹாவி பலி

ஈரான் ஆதரவு பெற்ற ஏமனின் ஹவுதி அரசின் பிரதமர் அஹமத் அல்-ராஹாவி கொல்லப்பட்டுள்ளார் என ஹவுதி கிளர்ச்சிப் படை நேற்று அறிவித்தது. இந்த தாக்குதல் ஏமன் தலைநகர் சனாவில் நடந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை அன்று இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஹவுதி அரசின் அமைச்சர்கள் மற்றும் பிரதமர் அஹமத் அல்-ராஹாவி கொல லப்பட்டுள்ளார் என ஹவுதி படை தெரி வித்துள்ளது. இதை அன்றைய தினம் இஸ்ரேல் பாதுகாப்பு படையும் உறுதி செய்திருந்தது.

'ஹவுதி தீவிரவாத படையின் முக்கிய இடத்தின் மீது துல்லிய தாக்குதல் மேற் கொண்டோம்' என இஸ்ரேல் தெரிவித்தது.

கடந்த 2024 இல் ஒகஸ்ட் மாதம் ஹவுதி அரசின் பிரதமர் பொறுப்பை அஹமத் அல்-ராஹாவி ஏற்றார்.

இந்நிலையில், அண்மையில் அவரது தலைமையில் தங்களது அரசின் ஓராண்டு கால செயல்பாடு குறித்த ஆலோசனை நடந்துள்ளது. அதில் ஹவுதி அரசின் அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிர முகர்கள் பங்கேற்றனர். அப்போது இந்த தாக்குதல் நடந்ததாக ஹவுதி படை கூறியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையி லான மோதலில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஏவுகணை தாக்குதலை இஸ்ரேல் மீது ஹவுதி படையின் தொடுத்தி ருந்தனர்.

இருப்பினும் அந்த ஏவுகணைகளை வான் பாதுகாப்பு கவச அமைப்பு மூலம் இடைமறித்து அழைத்திருந்தது இஸ்ரேல். அதோடு செங்கடல் பகுதியில் கப்பல்களை யும் குறிவைத்து தாக்கி இருந்தது ஹவுதி. அதற்கு பதிலடி தரும் வகையில் அமெ ரிக்கா மற்றும் இஸ்ரேல் இராணுவம் செயல்பட்டன.

இந்த சூழலில் கடந்த மே மாதம் அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் நிர்வாகம், ஹவுதி படையினருடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. அதில் செங்கடல் பகுதி யில் கப்பல்கள் மீதான தாக்குதலை நிறுத்தினால், தங்களது வான்வழி தாக்குதலை நிறுத்திக் கொள்வதாக அமெரிக்க தெரிவித்தது. இருந்தாலும் இந்த ஒப்பந்தம் இஸ்ரேல் உடன் தொடர்பு கொண்ட கப்பல்கள் மீதான தாக்குதலை நிறுத்தாது என ஹவுதி தெரிவித்தது.

முன்னதாக, இந்த வாரம் ஏமன் தலைநகர் சனாவில் தொடர் வான்வழி தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டது. அதில் 10 பேர் உயிரிழந்தனர் மற்றும் 102 பேர் காயமடைந்தனர் என ஹவுதி அரசு தெரிவித்தது.

# உக்ரைனின் பிரபல அரசியல்வாதி ஆண்ட்ரி பருபி சுட்டுக்கொலை








உக்ரைன் நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரான ஆண்ட்ரி பருபி (வயது 54), உக்ரைனின் லிவிவ் நகரில் நேற்று பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மின்சார உந்துருளியில் அஞ்சல் பொதிகளை விநியோகிக்கும் நபராக வேடமணிந்து பிரவேசித்த துப்பாக்கி தாரியொருவர், ஆண்ட்ரி பருபி மீது பல முறை துப்பாக்கிச் சூடு நடத்தியதாக விசா ரணைகளில் தெரியவந்துள்ளது.

2014 ஆம் ஆண்டில், ரஷ்ய ஆதரவு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை பதவியிலிருந்து நீக்குவதற்கு வழி வகுத்த யூரோமைதான் போராட்டங்க ளில் ஆண்ட்ரி பருபி முக்கிய பங்கை வகித்திருந்தார்.

பின்னர் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பேரவையின் செயலாளராக பணியாற்றினார்.

ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி இந்த சம்பவத்தை வன்மையாக கண்டித் துள்ளார்.

இந்தநிலையில், துப்பாக்கிதாரி அடையாளம் காணப்படாத நிலையில், விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவ தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 31.08.2025

## மேஷம்

இன்றைய நாள் சிறப்பாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் வளர்ச்சிக்கான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள். புதிய மனிதர்களுடனான தொடர்புகள் இன்று ஏற்படும்.

உங்கள் பணியில் வளர்ச்சி ஏற்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உங்கள் அன்பை / காதலை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களின் கையிருப்பு பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டிடுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.

## மிதுனம்

நீங்கள் செயல்களை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் இன்னும் முயல வேண்டும்.

இன்று நல்ல பலன்களைக் காண நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும். இதன் மூலம் நீங்கள் அதிகப்படியான பணிகளை சமாளிக்க முடியும்.

உங்கள் உணர்ச்சிப் பூர்வமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை பயன்படுத்துவீர்கள். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.

## கடகம்

இன்று அதிகப்படியான செயல்கள் காணப்படும். அவைகளை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும்.

நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியைப் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். இருவரும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள். இன்று புதிய முதலீட்டுக்குத் திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் தொடர்பாடலில் பிரச்சினை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகளில் கவனம் தேவை.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. அதன் காரணமாக பதட்டம் ஏற்படும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

உங்கள் நேர்மை மற்றும் உண்மை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும்.இதனால் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

தேவையற்ற சில விஷயங்களுக்கு பணம் செலவு செய்ய நேரும். அதனால் இன்று சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

பதற்றம் மற்றும் ஓய்வின்மை காரணமாக இன்று களைப்பாக உணர்வீர்கள். இன்று உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கன்னி

இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

## துலாம்

இன்று உங்கள் செயல்களுக்கு தக்க பலன்கள் கிடைக்காது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். பொறுமையும் நேர்மறை அணுகுமுறையும் அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருப்பதற்கு எண்ணெய் மற்றும் கார உணவு வகைகளை தவிர்க்கவும்.

## விருச்சிகம்

இன்று உங்களுக்கு சிறிது அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் தந்தையின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிக்க நீங்கள் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டும். உங்கள் திறமையும் நேர்மையும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் அணுகுவது சிறந்தது. இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் மனதிடம் காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.08.2025




இன்று சிறிது தடைகளுக்குப் பின் வெற்றியைக் காண்பீர்கள். என்றாலும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் மட்டுமே இன்று நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைக் காண முடியும்.

கடின உழைப்பு மூலம் நீங்கள் இன்று வெற்றி பெற இயலும். உங்கள் பணிகளை விரைவில் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து நட்பாக பழகுவதன் மூலம் சிறந்த புரிந்துணர்வு ஏற்படுத்தலாம். இதன் மூலம் நல்லுறவும் உறவில் திருப்தியும் ஏற்படும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

முறையாக ஓய்வெடுப்பதன் மூலம் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று சவால்கள் நிறைந்து காணப்படும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தவறுகளை அடுத்தவர் சுட்டிக் காட்டாமல் இருக்க பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக உறவில் குழப்பம் ஏற்படலாம். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பயணத்தின் போது பண இழப்பு நேரலாம்.

ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




முறையான முயற்சி உங்கள் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற உதவும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக இல்லாவிட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். நண்பர்களின் தொடர்பு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள்பணிகளைமுடிக்கநீங்கள்கடினமாகஉழைக்க வேண்டும். ஆனால் நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது உங்கள் பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

உறவில் சிறிது அனுசரித்துப் போவது சிறந்த பலனைத் தரும். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இது உதவும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். என்றாலும் பணத்தை சம்பாதிக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும் என்ற ஆவல் உங்களிடம் இருக்கும்.




உங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது உகந்த நாள். பழைய நண்பர்களை சந்திப்பது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். பணியில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கும்.

நம்பிக்கையான எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் உற்சாகமாக்கிக் கொள்ளலாம். இந்த உணர்ச்சி உறவின் சுணக்கங்களை நீக்கி விடும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சேர்க்கும் வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் வரும் பணத்தை சேமிப்பீர்கள்.

வயிறு உபபுசம் காரணமாக இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். உணவில் கவனம் தேவை.

# டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவருக்கும் ஜனாதிபதி செயலாளருக்கும் இடையில் சந்திப்பு





எமது நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவர் பிரான்சுவா வெலரியன் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

அரச மற்றும் தனியார் துறைகளில் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளை பிரான்சுவா வெலரியனுக்கு விளக்கிய ஜனாதிபதியின் செயலாளர், ஊழல் எதிர்ப்பு இயந்திரத்தை வலுப்படுத்த அரசாங்கம் பல புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது என்றும் அவை ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

லஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல்,அரச நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் சிறந்த கலாச்சாரத்தை உருவாக்குதல் ஆகிய பரந்த நோக்கங்களுடன் லஞ்சம் மற்றும் ஊழல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கூறினார்.

லஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்க அரச நிறுவனங்களுக்குள் உள் விவகாரப் பிரிவுகளை நிறுவுவதையும், கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்ட நடவடிக்கைகளையும் பாராட்டிய டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனலின் தலைவர், ஊழல் எதிர்ப்பு இலக்குகளை முன்னேற்றுவதில் அரசாங்கமும் சிவில் சமூகமும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்க டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் உறுதி பூண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.